| | | |
|---|---|---|
| O.S No. | : | 241/2021 |
| DATE | : | 25.10.2025 |
| பெயர் | : | முகமது அமிர் பாஷா |
| தந்தை பெயர் | : | அகமது மொய்தீன் |

வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி

சாட்சியிடம் 18.12.2024 தேதியிட்ட அசல் வழக்கு எண் 256/2021ன் மாண்புமிகு கூடுதல் சார்பு நீதிபதி, காஞ்சிபுரம் வழங்கிய தீர்ப்புரை இணைய வழி பதிவிறக்கம் செய்யப்பட்டது காண்பிக்கப்பட்டது. சாட்சி அது தான் தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்புரை என்று ஒப்புக் கொண்டதன் அடிப்படையில் மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த வழக்கின் டவுன் சர்வே எண் 3041/1, 2B ஆகும். அந்த சொத்தை தான் எனது தந்தை செட்டில்மெண்ட் எழுதி கொடுத்தார். இந்த வழக்கில் அந்த செட்டில்மெண்ட் பற்றி தெரிவித்துள்ளோம். எனது தாத்தா எனது தந்தைக்கு 1320 சதுரடியில் 396 சதுரடி எழுதி கொடுத்தார். இந்த வழக்கில் அந்த 396 சதுரடியை எனது தந்தை 1ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்துவிட்டதாக தாவாவில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

அந்த சொத்தை பற்றி இந்த வழக்கில் எதற்காக தெரிவித்துள்ளேன் என்றால் நான் எனது சுய சம்பாதியத்தில் கட்டிய இடத்தை ஆக்கிரமிப்பு செய்ததால் வேறு வேறு சர்வே எண்ணாக இருந்தாலும் இந்த வழக்கில் அதை பற்றி தெரிவித்துள்ளேன். மீரான் மொய்தீன் எனது பெரிய அண்ணன் ஆவார். அவருக்கு தாவா சொத்தில் பாகம் உள்ளது. 1ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்ததாக சொல்வது பற்றி அவர் எந்த புகாரும் கொடுக்கவில்லை. சர்வே எண் 3093/2 எனது கடையின் சர்வே எண் ஆகும். பிராதில் ரோடு பட்டா என்று பத்தி 9ல் தெரிவித்துள்ளேன் அது எதை குறிக்கிறது என்றால் 3093/2 சர்வே எண்ணை குறிக்கிறது. அந்த ரோடு எனது தந்தைக்கு பாத்தியப்பட்டது கிடையாது.

இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள டவுன் சர்வே எண் 3049/1,2B, 3093/2 ஆன பீல்டு ரிஜிஸ்டர். 3093/2 கடைக்கான சர்வே எண். அதற்கான FMB வரைபடம் மற்றும் வருவாய் ஆவணங்களை தனியாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் சேர்ந்துள்ளது. வா.சா.ஆ.21ல் சர்வே எண் 3049/1ன் பீல்டு ரிஜிஸ்டரில் 3093/2 சேர்ந்துள்ளது. 3093/2ன் மொத்த விஸ்தீரனம் 8 அடிக்கு 22 அடி.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

(S/d.Fanny Rajan)
Principal District Munsif,
Kancheepuram.